செ.வெ.எண். 43/ஜுன் தேதி : 19.06.2016

**பத்திரிக்கைச் செய்தி**

## தருமபுரி, நல்லம்பள்ளி, பென்னாகரம், காரிமங்கலம், பாலக்கோடு ஆகிய வட்டங்களுக்குட்பட்ட 2828 பயனாளிகளுக்கு ரூ. 1 கோடியே 43 இலட்சத்து 11 ஆயிரம் மதிப்பில் நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன் அவர்கள் வழங்கினார்.





தருமபுரி, நல்லம்பள்ளி, பென்னாகரம், காரிமங்கலம், பாலக்கோடு ஆகிய வட்டங்களுக்குட்பட்ட 2828 பயனாளிகளுக்கு ரூ. 1 கோடியே 43 இலட்சத்து 11 ஆயிரம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா தருமபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (19.06.2016) நடைபெற்றது.

இவ்விழாவில் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன் அவர்கள் மாவட்ட பேரிடர் மேலாண்மை திட்டம் 2016 புத்தகத்தினையும், தொலைபேசி கையேட்டினையும் வெளியிட்டார். பின்னர் உணவு பொருள் வழங்கல் துறையின் சார்பில் 2290 நபர்களுக்கு புதிய குடும்ப அட்டைகளையும், சாதி சான்றிதழ் 97 நபர்களுக்கும், புதுவாழ்வு திட்டத்தின் சார்பில் 72 பயனாளிகளுக்கு மாற்றுத்திறனாளி தனிநபர் கடன் ரூ. 9 இலட்சத்து 60 ஆயிரத்திற்கான காசோலைகளையும், அமுதசுரபி சுயஉதவிக்குழு கடன் 101 மகளிர்களுக்கு ரூ. 45 இலட்சத்து 40 ஆயிரத்திற்கான காசோலைகளையும், மாற்றுத்திறனாளி உதவி உபகரணம் 19 நபர்களுக்கு ரூ. 91 ஆயிரத்திற்கான காசோலைகளையும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் மாற்றுத்திறனாளிகளுக்கான 4 வகையான திருமண நிதி உதவித்தொகை மற்றும் தாலிக்கு 4 கிராம் தங்கம் வழங்கும் திட்டத்தின்கீழ் 23 பயனாளிகளுக்கு ரூ. 9 இலட்சம் திருமண உதவித்தொகையும், 92 கிராம் தங்கமும், அரசு காது கேளாதோர் மேல்நிலைப்பள்ளி தருமபுரியில் பயிலும் 12ம் வகுப்பு மாணவர்கள் 7 பேருக்கு காதொலி கருவி வழங்கும் திட்டத்தின்கீழ் ரூ. 61 ஆயிரம் மதிப்பில் காதொலி கருவிகளையும், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தின் சார்பில் 2014-15 ஆண்டிற்கான சிறந்த அங்கன்வாடி பணியாளர்கள் 3 பேருக்கு மாநில அளவிலான நற்சான்றிதழ் மற்றும் ரூ. 15 ஆயிரத்திற்கான காசோலைகளையும், சமூக பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் முதியோர் உதவித்தொகை 64 பயனாளிகளுக்கும், இயற்கை மரணம் உதவித் தொகை 73 பயனாளிகளுக்கும், திருமண உதவித்தொகை 75 பயனாளிகளுக்கும், நலிந்தோர் நல குடும்ப உதவித்தொகை 2 பயனாளிகளுக்கும், கல்வி உதவித்தொகை 2 பயனாளிகளுக்கும் ஆக மொத்தம் 2828 பயனாளிகளுக்கு ரூ. 1 கோடியே 43 இலட்சத்து 11 ஆயிரம் மதிப்பில் நலத்திட்ட உதவிகளை வழங்கி மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது :-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 6வது முறையாக ஆட்சி பொறுப்பேற்றவுடன் தேர்தல் நேரத்தில் அறிவித்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில் முக்கிய திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்து வேளாண் பெருமக்களின் விவசாய கடன்களை தள்ளுபடி செய்தார்கள். 100 யூனிட் மின்சாரம் கட்டணம் ஏதுமில்லாமல் வீடுகளுக்கு வழங்கப்படும் என்ற வாக்குறுதியை நிறைவேற்றி தந்துள்ளார்கள். ஏழை பெண்களின் திருமணத்திற்கு திருமண நிதியுதவியுடன் திருமாங்கலியத்திற்கு 4 கிராம் தங்கத்தை 8 கிராம் ஆக உயர்த்தியுள்ளார்கள். நெசவாளர்களுக்கு கட்டணமில்லாமல் வழங்கப்படும்

மின்சாரத்தை 200 யூனிட்டுகள் எனவும், விசைத்தறிக்கு கட்டணமில்லாமல் வழங்கிய மின்சாரத்தை 750 யூனிட்டுகளாக உயர்த்தியும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றி தந்துள்ளார்கள். மக்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை அனைத்தையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்கள்.

இன்றைய தினம் தருமபுரி, நல்லம்பள்ளி, பென்னாகரம், பாலக்கோடு மற்றும் காரிமங்கலம் ஆகிய வட்டங்களுக்குட்பட்டவர்கள் புதிய குடும்ப அட்டை கேட்டு விண்ணப்பித்தவர்களுக்கு விண்ணப்பங்களை பரிசீலனை செய்து 2290 புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் திருமண உதவித் தொகையும், தாலிக்கு 4 கிராம் தங்கமும், சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் முதியோர் உதவித் தொகை, திருமண உதவித்தொகை, இயற்கை மரண உதவித் தொகை, நலிந்தோர் நல குடும்ப உதவித் தொகை, கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

அரூர் மற்றும் பாப்பிரெட்டிப்பட்டி பகுதிகளில் புதிய குடும்ப அட்டை கேட்டு விண்ணப்பித்தவர்களின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு புதிய குடும்ப அட்டை வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. அடுத்த 15 நாட்களுக்குள் அப்பகுதி மக்களுக்கு புதிய குடும்ப அட்டை வழங்க உள்ளோம். தருமபுரி மாவட்டத்தில் பொதுவிநியோக திட்டத்தின் கீழ் 1047 நியாய விலைக்கடைகள் இயங்குகிறது. கடந்த 5 ஆண்டுகளில் 15 ஆயிரத்தி 544 புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது. மாதந்தோறும் 8 ஆயிரத்து 309 டன் அரிசி பெறப்பட்டு நியாய விலைகடைகளின் மூலம் மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதுமட்டுமின்றி அந்தியோதயா அன்னயோஜனா திட்டத்தின் கீழ் 53 ஆயிரத்தி 323 குடும்ப அட்டைகளுக்கு மாதந்தோறும் 35 கிலோ அரிசி விலையில்லாமல் வழங்கப்பட்டு வருகிறது. தருமபுரி மாவட்டத்தில் உள்ள 7 வட்டங்களிலும் புதன் கிழமை தோறும் வட்ட வழங்கல் அலுவலங்களில் சிறப்பு மனுக்கள் முகாம்கள் நடத்தப்பட்டு அதன்மூலம் பெறப்பட்ட 8 ஆயிரத்து 599 மனுக்கள் மீது உடனடி தீர்வு காணப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி கடந்த 5 ஆண்டுகளில் அனைத்து வட்டங்களிலும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் அம்மா திட்ட சிறப்பு முகாம்களில் 6 ஆயிரத்தி 667 மனுக்கள் பெறப்பட்டு உடனடியாக தீர்வு காணப்பட்டுள்ளது. பொதுமக்கள் அரசு நடத்தும் முகாம்களில் தங்களது கோரிக்கைகள் குறித்து மனு அளிக்கும்போது உரிய சான்றுகளை இணைத்து அனுப்பினால் சம்மந்தப்பட்ட மனு மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சிகளில் பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் திரு.பி. பழனியப்பன், மாவட்ட ஊராட்சித்தலைவர் திரு. தொ.மு. நாகராஜன், தருமபுரி நகரமன்ற தலைவர் திருமதி. சுமதி, நல்லம்பள்ளி ஒன்றியக்குழு தலைவர் திரு.எம். முனுசாமி, பென்னாகரம் ஒன்றியக்குழு தலைவர் திரு. மதியழகன், காரிமங்கலம் ஒன்றியக்குழு தலைவர் திருமதி. தமிழ்செல்விகுமார், மாவட்ட வருவாய் அலுவலர் திரு. அ. சங்கர், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு. மு. பிச்சைராமன், மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் திரு. இரா. மகிழ்நன், புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. நாராயணன், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் திருமதி. பத்மாசனி, சமூக பாதுகாப்பு திட்ட தனித்துணையாட்சியர் செல்வி. வள்ளி, தருமபுரி கோட்டாட்சியர் திரு. இராமமூர்த்தி, மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் திரு. சோமசுந்தரம், திரு. சேட்டு, திரு. முருகன், மாவட்ட பால்வள துணைப்பெருந்தலைவர் திரு. பெரியசாமி, வட்டாட்சியர்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.